Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

06.01.2021 புதன்கிழமை

## புதினம் தெரியுமோ?

சில நெருக்கடிகளை தவிர்ப்பதற்கு தற்போதைய நவீன தொழில்நுட்பம் பெரிதும் உதவுகின்றது. மக்களுக்கு நன்மை கிடைப்பதற்காக அறிமுகப் படுத்தும் தொழில்நுட்பத்தையும் 8

# இலங்கைத் தமிழரின் அபிலாஷையை பூர்த்தி செய்வது அரசின் நலனுக்கே உகந்தது!!!

## மாகாணசபை முறைமை தொடரவேண்டும் என்றும் ஜெய்சங்கர் கொழும்பில் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 6
ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாஷகளைப் பூர்த்தி செய்து சமத்துவம், நீதி, சமாதானத்துடன் கண்ணியமான வாழ்க்கையை அமைப்பது அரசின் பொறுப்பாகும். இது இலங்கையின் நலன்களுக்கு உகந்ததாகும். இவ்வாறு இந்திய 2







## எருக்கலம்பிட்டியும் தற்காலிக முடக்கம்

*ஆர்.டி.எச்.எஸ். அறிவிப்பு*

மன்னார், ஜன. 6
மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனா 8

யாழ்ப்பாண மாவட்டத்தில்

# 42 ஆயிரம் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கம்

## வலி. வடக்கில் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத ஜி.எஸ். பிரிவுகளும் முதல் தடவையாக மீளாய்வுக்குள்




யாழ்ப்பாணம், ஜனவரி 6
2020 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 42 ஆயிரத்து 234பேர் நீக்கப்படவுள்ளனர். இவர்களின் விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. வலி. வடக்கில் மீள்குடியமர்வுக்கு முழுமையாகவோ பகுதியாகவோ அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகளும் முதல் தடவையாக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதனால் 21ஆயிரத்து905பேரின்பெயர்கள்நீக்கப்பட்டுள்ளன. 2

ஐ.நாவில் சமர்ப்பிக்கும் ஆவணத்தில்

## கையெழுத்திட்டோருக்கு சட்டச் சிக்கல் வருமாம்

*சுமந்திரன் எம்.பி. கடிதம்*

யாழ்ப்பாணம், ஜன. 6
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கவுள்ள ஆவணமொன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை மாவை சேனாதி 2

## வெளிநாடுகளில் வசிப்பவர்கள் வாக்காளராகப் பதிய சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 6
மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த, தற்போது வெளிநாடுகளில் வதிபவர்கள் வாக்காளர்களாகப் பதிவு 8

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி


## சர்வமத வழிபாடு நாளை

யாழ்ப்பாணம், ஜன. 6
குரலற்றவர்களின் குரல் அமைப்பால், 'ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறைமீட்போம்' என்னும் தொனிப் பொருளில் தமிழ் அரசியல் கைதி 2

'மாஸ்க்', சமூக இடைவெளி இல்லை

## குறாப் 'செல்பியால்' மாட்டிய இளைஞர்கள்

கல்முனை, ஜன. 6
கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் வர்த்தக நிலையம் மூடப்பட்டுள்ளதுடன் அங்கு பணியாற்றிய 4 ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, அவர்கள்மீது நீதிமன்றத்தில் 2




## பட்டாணிச்சூர் பகுதி முழுமையாக முடக்கம்

*கண்காணிப்பில் ராணுவம்*

வவுனியா, ஜன. 6
வவுனியா பட்டாணிச்சூரைச் சேர்ந்த 7பேர் இதுவரை தொற்றாளர்களாக அடையாளம் 2

# 42 ஆயிரம்....

2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகின்றது. பெப்ரவரி முதலாம் திகதி பட்டியல் இறுதி செய்யப்படும். தற்போது வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இருந்து நீக்கப்படுவர்கள் மற்றும் சேர்க்கப்படுபவர்களின் விவரங்கள் காட்சிப்படுத்தியுள்ளோம். அது தொடர்பான ஆட்சேபனைகளை உரிமைக் கோரிக்கை படிவங்கள் ஊடாக கையளிக்க முடியும்' என்று யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல்ராஜ் தெரிவித்தார்.
2019ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 லட்சத்து 79ஆயிரத்து 584பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அதிலிருந்து 42ஆயிரத்து 234பேர் நீக்கப்படவுள்ளனர். 33ஆயிரத்து 211பேர் சேர்க்கப்படவுள்ளனர். இவர்களின் பட்டியலே தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

### மீளாய்வு

போர்ச் சூழல் காரணமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்டங்களில் வாக்காளர் பெயர்ப்பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. போர் முடிந்த பின்னர் முதல் தடவையாக 2010ஆம் ஆண்டு மீளாய்வு செய்யப்பட்டது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் மாத்திரம் 4 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டன. இதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்டது. வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மக்கள் மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகள் மீளாய்வு செய்யப்படுவதில்லை.
2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும்போது, வலி. வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத 21 கிராம அலுவலர் பிரிவுகளையும் மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டி ருந்தது. மக்கள் மீளக்குடியமராத கிராம அலுவர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களை நாட்டின் எந்தப் பாகத்திலிருந்தாலும், வெளிநாடுகளிலிருந்தாலும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்தல் விடுத்து இதற்காக சிறப்பு விண்ணப்பப் படிவமும் தேர்தல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டிருந்தது.
அரசியல் தரப்புக்களின் கடும் அழுத்தங்களையடுத்து இறுதி நேரத்தில் மீளாய்வுக்கு உட்படுத்தும் நடவடிக்கை கைவிடப்பட்டது. அத்துடன் இதுவே இறுதிச் சந்தர்ப்பம் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

### 21 ஆயிரம் பேர் நீக்கம்

இந்த நிலையில் 2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல் தயாரிப்பின் போது மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத 21 கிராம அலுவலர் பிரிவுகளும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள், இதுவரை நடந்த ஏதாவது ஒரு தேர்தலில் வாக்களித்திருந்தாலும் அவர்களின் பெயர்களை நீக்காமல், எந்தவொரு இடத்திலும் பதிவு செய்யாத, வாக்களிக்காதவர்களின் பெயர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட 21 ஆயிரத்து 905பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

### தாக்கம்

கடந்த 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தின் வாக்காளர் பெயர் பட்டியலில் ஒவ்வொரு ஆண்டும் ஆகக் குறைந்தது 7 ஆயிரம் பேராலாவது அதிகரிப்பு ஏற்பட்டு வந்தது. முதல் முறையாக 9 ஆயிரம் பேரால் குறைவடையவுள்ளது. இதனால் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான தேர்தல் ஆசனம், பல்கலைக்கழக அனுமதி உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் இதன் தாக்கம் எதிரொலிக்கவுள்ளது. (ஒ,5)

# இலங்கைத் ...

வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.
இதேவேளை, இலங்கை அரசு அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திய அவர், இந்தத் திருத்தத்துக்கு அமைய அதிகார விடயங்களில் இலங்கை அரசு செயலாற்றும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.
இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர், இன்று காலை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவையும், வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவையும் சந்தித்துப் பேச்சு நடத்தினர். வெளிவிவகார அமைச்சில் அமைச்சர் தினேஷ் குணவர்தனவை, ஜெய்சங்கர் சந்தித்த பின்னர் இருவரும் இணைந்து அங்கு ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தியா, இலங்கையின் நம்பகத்தன்மை மிக்க சகாவாக என்றும் விளங்கும்.
இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இலங்கையிலும் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்.
நிதி மற்றும் பொருளாதார விடயங்கள் குறித்து இரு தரப்புக் கலந்துரையாடல்களை மேற்கொள்வதே எனது பயணத்தின் நோக்கமாகும்.
அடிப்படை வசதிகளை மேம்படுத்தல், சக்தி மற்றும் தொலைத்தொடர்பு துறைகளில் இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு இந்தியாவின் குறுகிய மற்றும் மத்திய கால ஒத்துழைப்புகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளேன்.
கொரோனாத் தடுப்பு மருந்தை இந்தியாவிடமிருந்து பெறுவதற்கான உத்தியோகபூர்வ வேண்டுகோளை இலங்கை முன்வைத்துள்ளது. கொழும்பில் நடைபெற்ற சந்திப்புக்களின்போது என்னிடம் இந்த வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. இலங்கையின் இந்த வேண்டுகோளை இந்திய மத்திய அரசின் தலைமையிடம் முன்வைப்பேன்.
மருந்து உற்பத்தி நடவடிக்கைகளுக்கான விசேட மையங்கள் உட்பட இந்திய தொழில் முனைவோர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் வழிகாட்டல்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு, இந்தியா வழிகாட்டல்களை வழங்க ஆர்வமாக உள்ளது.
கடல் பாதுகாப்பு குறித்து இந்தியாவும் இலங்கையும் பல்வேறு விடயங்களில் இணங்கியுள்ளன.
மீன்பிடித்துறை சார் விடயங்களில் கலந்துரையாடல்கள் தொடரும். இந்திய மீனவர்கள் பலர் இலங்கைச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். எங்கள் மீனவர்கள் விரைவில் நாடு திரும்புவதை எதிர்பார்த்திருக்கின்றோம்.
இலங்கை இந்திய இரு தரப்பு இராஜதந்திர உறவுகளை மேம்படுத்திக்கொள்வதற்கான அடுத்தகட்டக் கலந்துரையாடல்களுக்காக இலங்கையின் வெளிவிவகார அமைச்சருக்கு இந்தியா வருமாறு அழைப்பு விடுத்துள்ளோம், என்றார். (ஒ,22)

# கையெழுத்திட்டோருக்கு...

ராசாவும் கையெழுத்திட்டுள்ளனர்.
இந்த ஆவணத்தில் கையெழுத்திட்டவர்களை அதிலிருந்து விலகும்படியும், தீவிர நிலைப்பாடுடைய தமிழ்த் தரப்புக்களுடன் இணைந்த செயற்பட்டால் சட்டரீதியான சிக்கல்களை சந்திக்க நேரிடும் என்று கடிதமொன்றையும் சுமந்திரன் அனுப்பி வைத்துள்ளார்.
இந்தத் தகவலை மாவை சேனாதிராசாவும் உறுதிப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் கொழும்பில் இன்று மாலை நடைபெறும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையிலான சந்திப்பில் ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
பிரிட்டன் தமிழர் பேரவையால் வரைபொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கனேடிய, அமெரிக்காவிலுள்ள தமிழர் அமைப்புக்களும் அதில் இணைந்திருந்தன.
இந்த வரைபை ஏற்றுக்கொள்கிறோம் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், த.கலையரசன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், கோவிந்தன் கருணாகரம், த.சித்தார்த்தன் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் தவிர்ந்த கூட்டமைப்பின் மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பமிட்டுள்ளனர்.
இந்தநிலையில், இன்னொரு வரைபை தயாரிக்கும் முயற்சிகளில் எம்.ஏ.சுமந்திரன் ஈடுபட்டு வருகிறார் என கூறப்படுகின்றது.
இதேவேளை, தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்குக் கடிதமொன்றை சுமந்திரன் அனுப்பி வைத்துள்ளார்.
அதில், தீவிர நிலைப்பாடுடைய தமிழ் அரசியல் தரப்புக்களுடன் இணைந்து செயற்படுவது சட்டரீதியான நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்று எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், அந்தக் கடிதத்தின் பிரதிகள், ஆவணத்தில் கையெழுத்திட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ,22)

# அரசியல் கைதிகளின் ....

களின் விடுதலையை வலியுறுத்தும் சர்வமத வழிபாடு நாளை காலை 10 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள தியாகி அறக்கொடை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பௌத்த இஸ்லாமிய கிறிஸ்த்தவ சைவ சமயத் தரப்பினரை இணைத்து கூட்டு வழிபாடு மேற்கொள்வதன் ஊடாக ஆன்மீக ரீதியில் எமது உறவுகளின் விடுதலைக்கு வலிமை சேர்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த சர்வமத வழிபாட்டில், சர்வமத பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பத்தார் பங்குபற்றவுள்ளனர். (ஒ)

# குறாப்...

வழக்குத் தாக்கல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சாய்ந்தமருது பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.எம்.நிஸ்தார் தெரிவித்தார்.
'சாய்ந்தமருது பிரதான வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் நேற்று, இந்த ஊழியர்கள் முகக்கவசம் அணியாமலும் சமூக இடைவெளியைப் பேணாமல் கூட்டாக நின்று, செல்பி எடுத்து, அதனை பேஸ்புக்கில் பதிவிட்டிருந்தனர். இது தொடர்பில் சுகாதாரத்துறையின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து, மேலதிகாரிகளின் பணிப்புரையின் பேரில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்' என்று சுகாதாரப் பரிசோதகர் குறிப்பிட்டார்.
இவர்களது இச்செயற்பாடு சுகாதார நடைமுறைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலும் அரசின் கொரோனாத் தடுப்பு சட்டத்தை மீறும் வகையிலும் அமைந்திருந்தமையால் அந்தச் சட்டத்தின் கீழ், வர்த்தக நிலையத்தை 14 நாள்கள் மூடுவதற்கு உத்தரவிடப்பட்டிருப்பதுடன் 4 ஊழியர்களையும் தமது வீடுகளில் சுய தனிமைப்படுத்திக் கொள்ளுமாறும் பணிக்கப்பட்டுள்ளனர், என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ,இ)

# பட்டாணிச்சூர்....

காணப்பட்டுள்ளனர். அந்தப் பகுதி முழுமையாக முடக்கப்பட்டது. கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர். பட்டாணிச்சூரைச் சேர்ந்தோர் பணியாற்றும் நகர கடைப்பகுதிகளும் மக்கள் நடமாட்டத்துக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.
கடந்த திங்கட்கிழமை பட்டாணிச்சூரைச் சேர்ந்த இருவர் தொற்றாளர்களாக கண்டறியப்பட்டனர். அந்தப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் மேலும் 5பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அந்தப் பகுதியின் முடக்கக் கண்காணிப்புக்கு பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினரும் நிறத்தப்பட்டனர்.
பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் வவுனியா பசார் வீதியிலும் வவுனியா நகரிலுள்ள அனேகமான வியாபார நிலையங்களிலும் பணியாற்றி வருகின்றனர். இதனால் வவுனியா பசார் வீதியின் ஒரு பகுதி, தர்மலிங்கம் வீதி, சந்தை வீதி ஆகியவற்றில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இன்று காலை முதல் நிறுத்தப்பட்டுள்ளனர். அந்தப் பகுதிகளிலுள்ள வியாபார நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு பி.சி.ஆர். சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வீதிகள் ஊடாக பயணிக்கும் பொதுமக்களின் அடையாள அட்டைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டும் வருகின்றன. (ஒ,110)

# யாழில் சைவ உணவகம் தனிமைப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்ப்பாணம் நகரில் உள்ள சைவ உணவகம் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்ப டுத்தப்பட்டது.

புலோலிப் பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான நபர் கடந்த வருடம் 31ஆம் திகதி மேற்படி உணவகத்துக்கு வந்து சென்ற தன் அடிப்படையில் இன்று காலையிலிருந்து தனிமைப்ப டுத்தப்பட்டுள்ளது. (ஒ,20)

# அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைக்குமா?

## கூட்டு ஒப்பந்த பேச்சு நாளை

கொழும்பு, ஜன. 6

பெருந்தோட்டத் தொழிலாளர் களின் சம்பளம் உட்பட இதர நலன்புரி விடயங்களை நிர்ணயிக்கின்ற கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சு நாளை நடைபெறவுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிர ஸின் நிதிச்செயலரும், நாடாளு மன்ற உறுப்பினருமான மருத பாண்டி ராமேஸ்வரன் இந்த தகவலை இன்று சுடர்ஒளியிடம் உறுதிப்படுத்தினார்.

தொழில் அமைச்சர் நிமல் சிறிபா லடி சில்வா தலைமையில் நடை பெறவுள்ள கூட்டு ஒப்பந்த பேச்சில், ஒப்பந்தத்தில் கைச்சாத் திடும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும், முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

தமக்கான அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா அவசி யம் என பெருந்தோட்டத் தொழி லாளர்கள் வலியுறுத்திவருகின்ற னர். எனினும், இந்தக் கோரிக் கையை ஏற்பதற்கு முதலாளிமார் சம்மேளனங்கள் மறுப்பு தெரிவித் துவருகின்றன.

பெருந்தோட்டத் தொழிலாளர் கள் தற்போது அடிப்படை நாள் சம்பளமாக 700 ரூபாவை பெறும் நிலையில் அதனை 750 ரூபாவரை அதிகரிப்பதே கம்பனிகளின் எதிர்ப்பார்ப்பு. தொழிற்சங்கங்க ளும் இழுத்தடிப்பு செய்துவருகின் றன. இந்நிலையிலேயே நாளை தீர்க்கமான சந்திப்பு நடைபெற வுள்ளது. (ஒ,44)



# 'நல்லூரான் செம்மணி வளைவு' பொங்கல் தினத்தன்று திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் பிரமாண்டமாக அமைக்கப்பட்ட 'நல்லூரான் செம்மணி வளைவு' எதிர் வரும் 14 ஆம் திகதி பொங்கல் தினத் தன்று மதியம் 12 மணிக்கு திறக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண மக்களின் கலை கலா சார பண்பாட்டு விழுமியங்களின் புனித வாழ்க்கை நெறியான கந்தபு ராண கலாசாரத்தின் அடையாளங்கள் பல இவ் வளைவில் வடிவமைக்கப்பட் டுள்ளன. 2019 ஆண்டு ஒகஸ்ட் மாதம் குறித்த வளைவுக்கான அடிக்கல், முன் னாள் இராஜாங்க அமைச்சர் விஜய கலா மகேஸ்வரனால் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-111)

# தேசிய கீதம் மொழிபெயர்ப்புக்கு தடை விதிக்கப்பட வேண்டும்!!

## மீண்டும் முருங்கை மரம் ஏறும் சிங்கள பௌத்த அமைப்புக்கள்


கொழும்பு, ஜன. 6

தேசிய கீதம் மொழி பெயர்க்கப்படுவதை தடைசெய்ய வேண் டுமென தாய் நாட்டைப் பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்ச தேரரால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பை உருவாக்கும் நிபுணர் குழுவிடம் இந்த யோசனை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தேசிய கீதம் இனி வரும் காலங்களில் மொழி பெயர்க்கப் பட்டு இசைக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டின் இறைமைக்கும் பௌதீக ஒருமைப்பாட்டுக்கும் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் செயற்படுபோரின் சிவில் உரிமைகளை ரத்துச் செய்யும் வகையிலான சரத்தொன்றை புதிய அரசமைப்பில் உள்ளடக்க வேண்டுமென அவர் தனது பரிந்துரைகளில் குறிப்பிட்டுள்ளார். (ஒ,இ)



# கிளிநொச்சியிலும் படைப்புழு தாக்கம் 18 ஏக்கர் சோளச்செய்கை பாதிப்பு !

கிளிநொச்சி,ஜன.6

இலங்கையில் சோளப் பயிர்க ளுக்கு சவாலாக மாறி வருகின்ற படைப்புழுவின் தாக்கம் கிளி நொச்சி மாவட்டத்திலும் உணரப் பட்டுள்ளது. கனகாம்பிகைக் குளம், ஜெயபுரம், நல்லூர் ,வன் னேரி, அக்கராயன் குளம் போன்ற பகுதிகளில் 18 ஏக்கர் வரை சோளச் செய்கை பாதிக்கப்பட்டுள் ளது என சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட மாகாண பிரதி விவசா யப்பணிப்பாளர் பொன்னையா அற்புதச்சந்திரன் கருத்து தெரிவிக் கையில்

"மாவட்டத்தில் 160 ஏக்கர் நிலப் பரப்பில் சோளச் செய்கை மேற் கொள்ளப்பட்ட நிலையில் தற் போது 18 ஏக்கர் நிலப்பரப்பில் படைப்புழுவின் தாக்கத்தை உணரக்கூடியதாகவுள்ளது. இரண்டு வாரம் தொடக்கம் இரண்டு மாதங்கள் வரையிலான பயிர்களிலேயே இவற்றின் தாக் கத்தை அவதானிக்க முடிகிறது. விவசாயப் போதனாசிரியர்களின் வழிநடத்தலின் கீழ் பல பிரதேசங்களில் படைப்புழு விவசாயிகளால் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டுள்ளது. படைப்புழு தொடர்பாக விவசா யப்போதனாசிரியர் பிரிவிவு களில் விழிப்புணர்வு செயற்பாடு களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.(ஐ-113)





# கொழும்புத்துறைமுக முனையம்: வெளிநாடுகளுக்கு வழங்கவில்லை

## ஜெய்சங்கர் கொழும்பில் நிற்கும் நிலையில் பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 6

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் முகாமைத்துவம், உரிமை அல்லது பகுதியளவிலான உரிமையை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கவில்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் வெளிவிகார அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்புக்கு இரு நாள் பயணமாக வந்துள்ள நிலையிலேயே இவ்வாறானதொரு நிலைப்பாடு அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் அநுரகுமார



திசாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், கொழும்பு துறைமுகம் நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய மையமாகும் என்று கூறினார்.

கிழக்கு முனையத்துக்;கான துறைமுகங்கள் மற்றும் கடற்படை விவகார அமைச்சுடன் தொடர்பு கொள்ளாமல் கடந்த நல்லாட்சி அரசு ஒரு ஒப்பந்தத்தை செய்துள்ளது என அவர் குற்றம் சாட்டினார்.

இந்தியா மற்றும் ஜப்பானுடனும் அப்போதைய அரசு ஒரு உடன்பாட்டை எட்டியது எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச குறிப்பிட்டார். (ஒ.இ)

# கொரோனாத் தொற்று பெரும் நெருக்கடியில் இலங்கைப் பெண்கள்

*தலதா அத்துகோரல தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.6

கொவிட் தொற்றின் மூன்றாம் அலையில் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்களும், நாட்டுக்கு பெரியளவில் அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள பணிப்பெண்களும் தற்போது மிகப் பெரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இவர்கள் தொடர்பில் அரசாங்கம் முழுமையான கவனம் செலுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாம் மகளிர் தொடர்பான யோசனைகளை முன்வைத்த போது அதற்கு எதிராக கூச்சலிடப்பட்டது. ஆனால் இன்று பெண்களின் பிரச்சினை தொடர்பில் அமைச்சரவையில் பேசுவதற்குக் கூட ஒரு அமைச்சர் நியமிக்கப்படவில்லை. ஆடைத் தொழிற்சாலை மூலம் நாட்டுக்கு வருமானத்தைப் பெற்றுக்கொடுப்பது பெண்களாவர். கொவிட் தொற்றால் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுக்கும் பெண்களை அழைத்து வருவதற்கு கூட அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

பெண்களுக்கான அமைச்சு ஒன்றைக் கூட வழங்க முடியாத அரசாங்கத்தின் ஆட்சியில் பொறுப்புள்ள எதிர்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் குரல் கொடுக்குமென்றார்.(ற-இ)



# சந்திப்பு

கொழும்பு, ஜன.6

இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கொமொடோர் முஹம்மட் ஷபிஉல் பாரி பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்னவை நேற்று சந்தித்தார். இந்தச் சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக சினேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பங்களாதேஷ் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருக்கிடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# திருமலை மாடுகளை தாக்கும் புதிய நோய்

திருகோணமலை, ஜன.6

திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களில் உள்ள மாடுகள் ஒரு வித நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றன. கிண்ணியா பக்கிரான் வெட்டை, சுங்கான் குழி , ஆயிலியடி வட்டமடு வான் எல போன்ற பிரதேசங்களிலுள்ள மாடுகளிலேயே நோய் அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன.

மாடுகளுக்கு கட்டி போடுதல் மற்றும் வாயால் உமிழ் நீர் வடிதல் போன்ற அறிகுறிகள் தென்படுகின்றன என பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தற்பொழுது பால் கறப்பதிலும், இறைச்சிக்காக மாடுகளை விற்பதிலும் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

நோய் நிலை தொடருமாக இருந்தால் ஆயிரக்கணக்கான மாடுகள் இறக்கின்ற சந்தர்ப்பம் உள்ளது என பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை வடக்கிலும் மாடுகள் இலம்பி எனப்படும் ஒருவகை நோயால் பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## இன்று முதல்

# நாட்டில் பல பாகங்களிலும் அன்டிஜென் சோதனை

கொழும்பு, ஜன.6

மேல் மாகாணத்தில் மாத்திரம் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனையை இனிவரும் நாள்களில் நாட்டின் பல்வேறு இடங்களில் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என, பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, குறிப்பிட்ட சில இடங்களில் எழுமாறாக சிலரை தெரிவுசெய்து, 'ரெபிட் அன்டிஜென்' பரிசோதனையை முன்னெடுக்க திட்மிட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ள அவர், பொதுமக்கள் இதற்கு தங்களது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ச)

# நாட்டின் சட்டத்தில் பாகுபாடு; இதுவா தேசிய நல்லிணக்கம்?

*சுரேன் ராகவனிடம் மனோ கேள்விக்கணை*

கொழும்பு, ஜன.6

இந்த நாட்டில் நல்லிணக்கம் எங்கே இருக்கிறதெனக் கேள்வியெழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், இல்லாத ஒன்றுக்காக மாரடிக்க வேண்டாமென ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனிடம் கோரியுள்ளார்.

மேலும், நல்லாட்சியில் நான் வகித்த நல்லிணக்க அமைச்சை இந்த அரசாங்கம் முற்றாகவே அழித்து விட்டது. கனடா, ஒன்ராறியோ நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டவரைபு, இலங்கையில், தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டை அழிக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். கனடா சட்டம் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இந்த நாட்டில் எங்கே ஐயா, நல்லிணக்கம் இருக்கிறது? என சுரேன் ராகவனிடம் கேள்வியெழுப்பினார்.

'ஒரே நாடு ஒரே சட்டம்' என உங்கள் அரசாங்கம் சொல்கிறது. ஆனால் உங்கள் சட்டம் சிங்களவருக்கு ஒன்று, தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் ஒன்று என்ற அல்லவா இருக்கிறது. இதுவா தேசிய நல்லிணக்கம்?, இந்த அரசாங்கத்தில் இல்லாத ஒன்றுக்காக மாரடிக்க வேண்டாமென, சுரேன் ராகவனிடம் கேட்டுக் கொண்டார். (ந-இ)

# பிரதமரின் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நியமனம்

*கொழும்பு, ஜன.6*

*பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளராக ஏ.எம். டீ.எச்.தனசிறி அமரதுங்க நியமிக்கப்பட்டார்.*

*பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து அவருக்கான நியமனம் வழங்கப்பட்டது.*

*இவர் தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் முன்னாள் மேயராக பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)*





## சீனத் தூதுவர் – அஜித் நிவாட் நேற்றுமுன்தினம் சந்திப்பு

கொழும்பு, ஜன.6

இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஜென்ஹோங் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலை நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பு துறைமுக நகரம், ஹம்பாந்தோட்டை துறைமுகம் உள்ளிட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும், பொருளாதார ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது என கொழும்புக்கான சீனத் தூதரகத்தின் ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த சந்திப்பில் முதலீடு, வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (ந)

### ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

## 726 பில்லியன் ரூபாவாக கடன் மதிப்பு அதிகரிப்பு





கொழும்பு, ஜன.6

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதால் 2021 ஆம் ஆண்டில் 726 பில்லியன் வெளிநாட்டு கடனை வழங்கும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாா்ட் கப்ரால் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.மரிக்கார் நாடாளுமன்றில் நேற்று எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். ரூபாவின் பரிமாற்ற வீதம் சீராக இல்லாமையால் கடனின் மதிப்பு அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் விற்பனை விலை 191 ரூபாவாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## மாஸ்க் அணியாத 14 பேருக்கு தொற்று

### அஜித் ரோஹண தெரிவிப்பு

கொழும்பு, ஜன.6

மேல் மாகாணத்தில் முகக்கவசம் அணியத்தவறிய 550 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனைகளில் 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியாதவர்களைக் கைது செய்து வழக்குத் தொடர்வதற்கு மேலதிகமாக அவர்களை பி.சி.ஆர். மற்றும் உடனடி அன்டிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடைமுறை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி, 550 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட உடனடி அன்டிஜன் பரிசோதனையில் 14 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வஇ)

## பத்திரிகை சட்டத் திருத்தம்: அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு,ஜன.6

வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல முன்வைத்த, இலங்கைப் பத்திரிகை பேரவை சட்டத்தைத் திருத்துவதற்கான யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

இலங்கைப் பத்திரிகை பேரவையின் சட்ட ஏற்பாடுகள், பத்திரிகைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளதால், பத்திரிகை பேரவையை கட்டமைப்பு ரீதியாக மறுசீரமைத்து, இலத்திரனியல், அச்சு நவீன ஊடகங்களை உள்ளடக்கும் வகையிலும் ஊடகக் கல்வியை ஊக்குவிக்கும் மையமாகவும் மீளக்கட்டமைக்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்டுள்ளது.

இதற்கமைய, சமகாலத்துக்குப் பொருத்தமான வகையில், இலங்கைப் பத்திரிகை பேரவைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக, கல்வியியலாளர் குழு ஒன்றை நியமிக்கவும் அதற்கான கருத்துகள் மற்றும் யோசனைகளை மக்கள், சிவில் அமைப்புகளிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

செய்திகள் பிரசுரிக்கப்படுவதால் பொதுமக்களுக்கு ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காகவும் ஊடகவியலாளர்களுக்கும் மக்களுக்கும் இடையிலான நல்லெண்ணத் தொடர்பு களை ஏற்படுத்துவதற்காகவும், 1973ஆம் ஆண்டு 5ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகை பேரவை சட்டத்தால் இலங்கைப் பத்திரிகை பேரவை நிறு வப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந)

## சில பகுதிகள் முடக்கம்

கொழும்பு, ஜன.6


இலங்கையில் மேலும் சில பகுதிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்படுகின்றன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். அதன்படி, கண்டி மற்றும் இரத்தின புரி மாவட்டங்களின் சில பகுதிகள் இன்று காலை 5 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கையில் மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய, அட்டாளைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில கிராமசேவகர் பிரிவுகளும், அத்துடன் ஆலையடிவேம்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில கிராம சேவகர் பிரிவுகளும், அக்கறைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் நகர அதிகாரத்துக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. (வ-இ)

## முதலை இழுத்துச் சென்ற மீனவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜன.6

மட்டக்களப்பு பெரியஉப்போடை பகுதியிலுள்ள வாவியில் மீன்பிடிக்கச் சென்று காணாமல்போனவர் சடலமாக நேற்றுக் கண்டெடுக்கப்பட்டுள்ளார். புன்னைச்சோலையை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆரோக்கியநாதன் மரியதாஸ் (48 வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில், மட்டக்களப்பு வாவிப்பகுதியில் மீன்பிடிக்கச்சென்ற போது முதலையால் இழுத்துச்செல்லப்பட்டு, சின்ன உப்போடையில் உள்ள களப்பு ஒன்றுக்குள் வைத்திருந்த நிலையில் மீனவர்களால் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. மேலும் அண்மைக்காலகமாக மட்டக்களப்பு வாவியில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (வ-இ)





## 24 மணிநேரத்தில் கிழக்கில் 38 தொற்றாளர்கள்

கிழக்கு மாகாணத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் 38 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அ.லதாகரன் தெரிவித்துள்ளார். இதன்படி, கிழக்கு மாகாணத்தில் இதுவரையான காலப் பகுதியில் கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 323 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், மட்டக்களப்பில் 264 பேரும், திருகோணமலையில் 173 பேரும், அம்பாறையில் பிராந்தியத்தில் 34 பேரும், கல்முனையில் 852 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர். தொற்றாளர்களில் 539 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதுடன், 802 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7பேர் உயிரிழந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# கொவிட் தடுப்பு மருந்து யாருக்கு? மருந்தைப் பொறுத்தே முடிவு

## கூறுகிறார் வைத்தியர் தீப கமகே

கொழும்பு. ஜன.6

நாட்டில் கொரோனாத் தொற்று தடுப்பு மருந்து தொடர்பில் ஆராய்ச்சிகள் இடம்பெற்று வரும் நிலையில், எந்த தடுப்பு மருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளது எனும் தீர்மானத்தைப் பொறுத்து யாருக்கு முதலில் தடுப்பு மருந்து வழங்குவது என்பது தீர்மானிக்கப்படும் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் தீப கமகே தெரிவித்துள்ளார்.



மேலும், நாட்டின் சனத்தொகையில் 20 வீதமானவர்களுக்கு முதற்கட்டமாக இலவசமாக தடுப்பு மருந்து வழங்கப்படும் என தெரிவிக்கப்படும் நிலையில், அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள், ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், கொரோனா வைரஸ் நோயாளிகளுடன் பணியாற்றும் ஏனைய முன்னிலை பணியாளர்கள் மற்றும் நாட்டின் பொருளாதாரத்துக்கு அவசியமான இடங்களில் பணியாற்றுபவர்கள் போன்றவர்கள் முன்னுரிமை அடிப்படையில் தடுப்பு மருந்து வழங்கப்படவேண்டியவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டின் 20 வீதமான சனத்தொகையினர் இரண்டு கட்டங்களாக தடுப்பு மருந்தைப் பெறுவார்கள். மருந்துகளை இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்கு தனியார் துறையினருக்கு அனுமதி வழங்குவதற்கான வாய்ப்புகள் நிராகரிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ந)

---

கண்டியில் கட்டடம்

# தாழிறங்கியமைக்கு தரமின்மையே காரணம்

*விசாரணை அறிக்கையில் தகவல்*

கண்டி, ஜன.6

கண்டி - பூவெலிகட பகுதியிலுள்ள ஐந்து மாடிக் கட்டடம் தாழிறங்கியமைக்கு காரணம் கட்டடம் உரிய தரத்தில் அமைக்கப்படாமையே என தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இது தொடர்பிலான விசாரணையின் இறுதி அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் நிலத்தில் எவ்வித பிரச்சினையும் இல்லை எனவும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி கண்டி - பூவெலிகட பகுதியில் ஐந்து மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் கைக்குழந்தை ஆகியோர் உயிரிழந்தனர். சம்பவம் தொடர்பில் கட்டடத்தின் உரிமையாளர் அனுர லெவ்கே கைது செய்யப்பட்டிருந்தார் என்பதுடன், தொடர்ச்சியாக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (வஇ)

---

# துமிந்த சில்வாவுக்கு மன்னிப்பு வேண்டும்

***ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு என்கிறார் எஸ்.பி திஸாநாயக்க***

கொழும்பு, ஜன.6

சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு எனத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்க, மரண தண்டனைக் கைதியான, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்குவது சிறந்தது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், கொவிட்19 தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் தகனம் செய்யப்படுமென விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ளது.

எனவே தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் உடல்களை தகனம் செய்வதா, அடக்கம் செய்வதா என்பது தொடர்பில், தீர்மானிக்க வேண்டிய தேவை, அரசாங்கத்துக்குக் கிடையாது.

கொவிட்19 தொற்றுக்கு மத்தியில், சுகாதாரத் தரப்பினரது தீர்மானங்களுக்கே முக்கியத்துவம் வழங்க வேண்டும் என, மதத் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில், அரசாங்கம் சுகாதாரத் தரப்பினரது தீர்மானத்துக்கே முன்னுரிமை வழங்கும். எனவே நாட்டு மக்கள் அனைவரும் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார். (ந-இ)

---

# மக்களைச் சாகடித்த பின்னரா கொரோனா தடுப்பு மருந்து

## அரசிடம் சஜித் கேள்வி

கொழும்பு, ஜன.6

கொரோனாத் தடுப்பு மருந்தைப் பெற முயற்சிக்காமல் அரசாங்கம் என்னும் ஏன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகள் ஏற்கனவே மருந்துகளை கொள்வனவு செய்துள்ளன.

தென்னாசிய நாடுகளான பங்களாதேஷூம், இந்தியாவும் தடுப்பு மருந்துகளை கொள்வனவு செய்துள்ளன. எனினும் இலங்கை மாத்திரம் இன்னமும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

---

# டிஜிட்டல் மயமாகின்றன காணிப் பதிவுகள்

கொழும்பு, ஜன.6

காணிப் பதிவு நடவடிக்கைகள் அனைத்தும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன. இதன் முதலாவது நடவடிக்கை கொழும்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த வருட இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் காணிகளைப் பதிவு செய்யும் 45 அலுவலகங்களில் இந்த சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்காக *'e Land'* மென்பொருளை உத்தியோகபூர்வமாக நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை கொழும்பு காணி பதிவாளர் அலுவலகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

---

# நிலக்கீழ் நீரால் தொற்று அபாயம்: வழக்கு 26 திகதிக்கு ஒத்திவைப்பு

அம்பாறை, ஜன.6

சிகிச்சையளிக்கப்பட்டு வரும் கொரோனாத் தொற்றாளர்களது கழிவுகளால் நிலக்கீழ் நீர் மாசடைந்து கொரோனா பரவும் அபாயம் உள்ளது எனத் தெரிவித்து அம்பாறை மாவட்ட பாலமுனை பிரதேச மருத்துவமனைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு இம்மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை பாலமுனை ஊர்மக்கள் சார்பில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.அன்ஸில் உட்பட ஐந்து பேர் தாக்கல் செய்திருந்தனர். அதன் பிரதிவாதிகளாக, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் அந்த மருத்துவமனையின் மருத்துவப் பொறுப்பதிகாரி ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர். இந்த வழக்கு நேற்று நீதிமன்றில் எடுக்கப்பட்ட போது, வழக்கை இம்மாதம் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று நீதிமன்ற நீதிவான் எம்.எச்.முஹம்மத் ஹம்ஸா கட்டளை பிறப்பித்துள்ளார். (வ-இ)

---

# உக்ரைன் சுற்றுலாவிகளால் கொரோனா நான்காம் அலை

*எம்.பி ஜேசி அலாவத்துல்ல தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.6

உக்ரைன் சுற்றுலாப்பயணிகள் மூலம் நாட்டுக்கு மூன்றாவது அலையை அரசாங்கம் வரவேற்றுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேசி அலாவத்துல்ல தெரிவித்துள்ளார். தொற்றுக்குள்ளான உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் புதிய வீரியமிக்க கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. மத்தல விமானநிலையத்தில் சுற்றுலாப்பயணிகள் வந்து சேர்ந்த வேளை அதனை அரசாங்கம் மிகப்பெரும் நிகழ்வாக காண்பித்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# தொழிலாளர் கைகளில் 1000 ரூபா கிடைக்கும்!!

## கூறுகிறார் நிமல் சிறிபாலடி சில்வா

கொழும்பு, ஜன.6

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கைகளில் ஆயிரம் ரூபா கிடைக்கும் என அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தை நிறைவு செய்து உரையாற்றும் போது அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,



முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை, சில உறுப்பினர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமையால் தடைப்பட்டுள்ளது.. எனினும், இந்தப் பேச்சுவார்த்தை ஜனவரி 7ஆம் திகதியன்று (நாளை) நடைபெறும்.

அதன்போது ஆயிரம் ரூபா சம்பளம் தொடர்பில் இணக்கப்பாடொன்றுக்கு வரமுடியுமென அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (ந-இ)

# நாலக எதிரிசிங்க சி.ஐ.டியிடம் சரண்!

கொழும்பு, ஜன.6

ஈ.ரீ.ஐ. மற்றும் சுவர்ணமஹால் நிறுவனத்தின் நிதி முறைகேடுகள் தொடர்பான வழக்கின் நான்காவது சந்தேக நபரான நாலக எதிரிசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று காலை சரணடைந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சட்டமா அதிபர் தப்புல டிலிவேராவின் உத்தரவுக்கு அமைவாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றைய தினம் ஈ.ரீ.ஐ. மற்றும் சுவர்ணமஹால் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக செயற்பட்ட ஜீவக எதிரிசிங்க, அஞ்சலி தீபா எதிரிசிங்க, அசங்க எதிரிசிங்க ஆகியோரை கைதுசெய்திருந்தனர். இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணை தொடர்பில் கைதான நால்வரும் இன்று கோட்டை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

13.7 மில்லியன் பணத்தை சட்டவிரோதமாக பெற்றுக்கொண்டமை உள்ளிட்ட நிதி முறைகேடு தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளர் நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார். (ந-இ)

# நாடாளுமன்றக் குழுவில் இரா.சாணக்கியன்

கொழும்பு. ஜன.6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நாடாளுமன்றத்தில் மற்றுமொரு ஆலோசனைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவால் இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவானது நாட்டின் அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் பங்கு கொள்ளும் முகவர் நிறுவனங்களினது நடவடிக்கைகளை கண்காணிக்கும் ஆலோசனைக் குழுவாகும். இதன் முதல் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. யு.என்.டி.பி, யு.எஸ். எய்ட், என்.டி.ஐ, ஐ.ஆர்.ஐ மற்றும் டபிள்யு.எப். ஆகிய நிறுவனங்களின் நடவடிக்கைகளே இக் குழுவால் கண்காணிக்கப்படுகின்றன. (ந)

# சுற்றுலாவிகள் விதி மீறினால் முகவர்கள் மீது சட்டம் பாயும்

## சுற்றுலாத்துறை அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன.6

இலங்கைக்கு வருகை தரும் போது சுற்றுலாப் பயணிகள் சுகாதார வழிகாட்டுதல்களை மீறினால் அவர்களை அழைத்து வரும் பயண முகவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பரீட்சார்த்த திட்டம் ஒன்றின் கீழ் கடந்த மாதம் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதன்



படி உக்ரைனிய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அனுப்ப மூன்று பயண முகவர் நிறுவனங்கள் ஒப்புக் கொண்டன. இந்தநிலையில் அவர்கள் சுகாதார வழிகாட்டுதல்களை மீறினால் எதிர்காலத்தில் பயண முகவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

# விரிவுபடுத்தப்படும் சிகிச்சை நிலையங்கள்

கொழும்பு, ஜன. 6

ஆயுள்வேத வைத்தியசாலைகளை கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நாவின்ன ஆயுள்வேத வைத்தியசாலையை கேந்திரமாகக் கொண்டு அதன் முதற்கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது என சுதேச வைத்திய மேம்பாடு மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார். (ஒ,இ)



# தரச்சான்றிதழ் பெற்ற பின்னரா பானம் அருந்தினார் சபாநாயகர் ?

கொழும்பு, ஜன.6

கேகாலை ஆயுள்வேத மருத்துவரின் மருந்தை சபாநாயகர் பயன்படுத்துவதற்கு முன்னர் தரச்சான்றிதழ் அதற்கு வழங்கப்பட்டதா என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

சுகாதார அதிகாரிகளின் அங்கீகாரமில்லாமல் மருந்துகளைப் பயன்படுத்துவது அதனைப் பயன்படுத்துபவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம். இது வேடிக்கையல்ல என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (வ-இ)

# இரு வகையினருக்கும் ஒரே விதிகள் இல்லை

## அமைச்சர் பிரசன்ன விளக்கம்

கொழும்பு, ஜன.6

வெளிநாட்டுப் பணியாளர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் இரு வகையினருக்கும் ஒரே சுகாதார விதிமுறைகளை விதிக்க முடியாது என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகள் தெரிவுசெய்யப்பட்ட இடங்களுக்கு குழுக்களாக மட்டுமே பயணிப்பர்.

இதேவேளை வெளிநாட்டுப் பணியாளர்கள் இங்கு வந்த பின் சமூகத்தில் ஒருங்கிணைக்கப்படுவர்.

வெளிநாட்டுப் பணியாளர்களுக்கான விதிமுறைகள் மேலும் நீடிக்கப்படும் அவை சமூகத்துக்கு அச்சுறுத்தலாக இல்லை என்பதைக் கண்டறிய மேலதிக நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# 1000 ரூபா சம்பள அதிகரிப்பு சாதகமான தீர்வு விரைவில்

## நம்பிக்கை தெரிவிக்கிறார் அமைச்சர் ரமேஷ்

கொழும்பு, ஜன.6

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரத்தில் விரைவில் சாதகமான தீர்வுகள் கிடைக்கப்பெறும் என அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

மேலும், கொரோனாத் தொற்று நிலைமையில் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் பெருந் தோட்டத் துறையினர் ஏற்றுமதி வருமானத்துக்கு பெரும் பங்காற்றி வருகின்றனர் . இந்நிலையில் நியாயமான சம்பளத்தை பெற்றுக்கொடுப்பதற்காக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். இது தொடர்பான சாதகமான தீர்வு கிடைக்கு



மென எதிர்பார்க்கின்றோம்.

பெருந்தோட்டங்களில் வசிப்பவர்கள் அங்கிருந்து வெளியேறி வரும் நிலையில், தோட்டங்களில் பணியாளர் பற்றாக்குறைகள் ஏற்பட்டுள்ளன. இது சம்பள அதிகரிப்பு விடயத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது. இதற்கு பொறிமுறையொன்றை தயாரிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

## புதினம் தெரியுமோ?

'கில்லாடிகள்' சிலர் தங்களின் தேவைகளுக்காக மாற்றியமைத்து விடுகின்றார்கள். மோட்டார் போக்கு வரத்துத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போக்கு வரத்து மருத்துவ நிலையத்துக்குச் சென்று மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்கு மக்கள் அதி காலையே நேரத்துடன் சென்று நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இந்த நிலைமை கொஞ்சம் மே ாசமாகவே இருந்தது.
தற்போது தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையத்தின் இணை யத்தளம் ஊடாக முன்பதிவு செய்து உரிய நேரத்துக்குச் சென்று மருத்துவச் சான்றிதழை பெறும் வசதி அறிமுகப்படுத்தப் பட்டது. ஒரு நாளைக்கு ஆகக் கூடியது 48பேர் பதிவு செய்ய முடியும். இரண்டு வாரங்களுக் குரிய திகதிகளில் முற்பதிவு செய்ய முடியும். மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தை இணையத்தில் செலுத்த வேண்டும். உதாரணமாக இன்று 6ஆம் திகதி என்றால் 20ஆம் திகதி வரையிலேயே முற்பதிவு செய்யமுடியும். யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் இவ்வாறு முற்பதிவு செய்ய முடியாமல் திணறுகின்ற னர். இதன் பின்னால் பணம் உழைக்கும் முதலைகள் சில இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் ஆரம்பமாகும் அதிகாலை 12 மணிக்கே, 48 பேரின் பெயர்கள் கொடுக்கப்பட்டு அவை முற்பதிவு செய்யப்படு கின்றன. இதற்காக மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தை விடவும் மேலதிக பணம் பெறு ளவில் அறவிடப்படுகின்றது.
பணம் உழைக்கும் முதலைகளின் இந்தச் செயற்பாட்டால் சாதாரண பொதுமக்கள் தொடர்ந்தும் பாதி க்கப்படுகின்றனர். ஒரு ஐ.பி. முகவரியிலிருந்து ஒரு நாளைக்கு ஒருவரைத்தான் முற்பதிவு செய்ய முடியும் என்றால் மாத்திரமே இந்தச் செயற்பாட்டை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என்று துறைசார்ந்தவர்கள் ஆலோ சனை கூறுகின்றனர்.

-பட்சி



## வெளிநாடுகளில் வசிப்பவர்கள்....

செய்து கொள்ள முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவினுள் உள்ளடங்கும், நகுலேஸ்வரம் (ஜே/226), காங்கேசன் துறை மேற்கு (ஜே/233), காங்கேசன்துறை மத்தி (ஜே/234), காங்கேசன்துறை தெற்கு (ஜே/235), கட்டுவன் (ஜே/238), தென்ம யிலை (ஜே/240), வறுத்தலைவிளான் (ஜே/241), குரும்பசிட்டி (ஜே/242), குரும்பசிட்டி கிழக்கு (ஜே/243), வசாவிளான் கிழக்கு (ஜே/244), வசாவிளான் மேற்கு (ஜே/245), மயிலட்டி வடக்கு (ஜே/246), மயிலிட்டித்துறை தெற்கு (ஜே/248), தையிட்டி வடக்கு (ஜே/249), தையிட்டி மேற்கு (ஜே/250), மயிலிட்டித் துறை வடக்கு (ஜே/251), பலாலி தெற்கு (ஜே/252), பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி வடக்கு (ஜே/254), பலாலி வடமேல் (ஜே/255), பலாலி மேற்கு (ஜே/256) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும்,
கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் ஆனையிறவில் (கே.என்./46), பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் இத்தாவில் (கே.என்./92), முகமாலை (கே.என். ஃ93), வேம்பொடுகேணி (கே.என்./94) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும்,
மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச செயலர் பிரிவில் முள் ளிக்குளம் (எம்.என்./153) கிராம அலுவலர் பிரிவையும் சேர்ந்த வர்கள் எங்கிருந்தாலும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
இந்தக் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் வடக்கு மாகாணத்தின் எந்தப் பிரிவில் வசித்தாலும் இதுவரை தம்மை பதிவு செய்யாவிடின், தாம் வசிக்கும் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலரிடம் சென்று விண்ணப்படிவத்தைப் பெற்று பதிவு செய்ய முடியும்.
இந்தக் கிராம அலுவலர் பிரிவுகளில் வதித்து தொழில், கல்வி அல்லது வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள் ளவர்களின் தகவல்களையும் இந்த விண்ணப்பத்தில் உட்சேர்ந்து அவர்களின் நெருங்கிய உறவினரால் அல்லது அட்டர்னி அதிகா ரம் வழங்கப்பட்டுள்ளவரால் கையொப்பம் இட்டு பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கலாம்.
முழுக் குடும்பமாக வெளிநாடு சென்றிருந்தால் அந்த நபர்களின் விண்ணப்பங்கள் குறித்த நாட்டின் இலங்கைத் தூதுவர் அலுவல கத்தின் ஊடாக கையளிக்க முடியும்.
வெளிநாடுகளில் இருப்பவர்கள் https://www.elections.gov.lk/ என்ற முகவரி ஊடாகச் சென்று விண்ணப்பப் படிவத்தை தரவிறக்கம் செய்ய முடியும். (ஒ,5)

## எருக்கலம்பிட்டியும்....

உறுதி செய்யப்பட்ட நிலையில் மன்னார் எருக்கலம்பிட்டி கிராமம் இன்று புதன் கிழமை காலை முதல் தற்காலிகமாக முடக் கப்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.
மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இன்று காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தொற்றுக்குள்ளானவர்கள் கடந்த 26ஆம் திகதி புத்தளத்திலிருந்து மன்னார் எருக்கலம் பிட்டிக்கு வருகை தந்துள்ளனர். குடும்பத் தலைவர் புத்தளத்திலிருந்து கொழும்புக்குச் சென்று கடந்த 29ஆம் திகதி மீண்டும் புத்த ளத்துக்கு வந்துள்ளார். கொழும்பு கொச்சிக்க டையில் நின்றபோது அவருக்கு மேற்கொள் ளப்பட்ட சோதனையின் போது தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.
இவருடைய குடும்ப உறுப்பினர்கள் 6 பேரும் மன்னார் எருக்கலம்பிட்டியில் உள்ள அவர்க ளது வீடுகளில் சுய தனிமைப் படுத்தப்பட்ட னர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது
குடும்பத்தலைவரின் மகள், மூன்று மகன்கள், மகளுடைய கணவர் ஆகிய 5 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குடும் பத்தலைவரின் மனைவிக்கு தொற்று இல்லை.
இவர்கள் 26ஆம் திகதி மன்னார் எருக்கலம் பிட்டிக்கு வந்து 27ஆம் திகதி திருமண நிகழ் வில் கலந்து கொண்டுள்ளனர். அந்த நிகழ்வுக் குச் சென்றவர்கள் மற்றும் இவர்களுடன் தொடர்புபட்டவர்கள் ஆகியோரின் விவரங் கள் சேகரிக்கப்படுகின்றன. அதற்கு அமை வாக தனிமைப்படுத்தப்பட்டும் வருகின்ற னர். இந்த நடவடிக்கை முடிவடையும் வரை மன்னார் எருக்கலம்பிட்டி கிராமம் தற்காலிக மாக முடக்கப்பட்டுள்ளது, என்றார். (ஒ,56)

# சிறைச்சாலையில் கொரோனா சந்தேகநபருக்குப் பிணை

கொழும்பு, ஜன. 6
சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள கொரோனா நீதிமன்றில் தொற்று அபாயத்தை முன்வைத்ததையடுத்து சந்தேக நபர் ஒருவர் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அதனை ஏற்றுக் கொண்டே கோட்டை நீதிவான் பிணை வழங்கினார்.
2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது புத்தளத்திலிருந்து 222 பேருந்துகளில் 12 ஆயிரம் இடம்பெயர்ந்த வாக்காளர்களை, மன்னார் சிலாவத்துறை பகுதிக்கு வாக்களிக்கச் செல்வதற்கு வசதி களை ஏற்படுத்திக் கொடுத்து 9.5 மில்லியன் ரூபா அரச சொத்தை தவறாக பயன்படுத்திய வழக்கில் கைது செய்யப்பட்ட மூன்றாவது சந்தேக நபரான அழகரட்ணம் மனோரஞ்சனே பிணை வழங்கி இன்று விடுவிக்கப்பட்டுள்ளார்.
கடந்த ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி பிணை மனு முதல் தடவை யாக எடுத்துக் கொள்ளப்பட்ட போது அது நிராகரிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மீண்டும் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டு அது கோட்டை நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் இன்று எடுத்துக் கொள்ளப்பட்டது.
இதன்போது சட்டத்தரணி கே.வி. தவராசா, கொழும்பு மகசின் சிறைச்சாலையில் கொரோனா தாக்கம் அதிகரித்துள்ளது. அங்கு உயிரிழப்பும் நிகழ்ந்துள்ளது. எனவே சந்தேக நபருக்கு பிணை வழங்கவேண்டும் என்ற வாதத்தை முன்வைத்தார். அதனை ஏற்றுக் கொண்ட நீதிவான் ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பிணையில் சந்தேக நபரை விடுவித்தார். (ஒ,5)

## அறநெறி பாடசாலைகள் 17ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, ஜன. 6
அறநெறி பாடசாலைகள் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட வுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.
தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் அறிநெறி பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,இ)

## இரணைமடு வான்கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, ஜன. 6
இரணைமடுக் குளத்தின் நீரேந்துப் பகுதிகளில் கிடைக்கப்பெறும் சிறி யள விலான மழை வீழ்ச்சி காரணமாக குளத் துக்கான நீர் வரத்து அதிக ரித்துள்ளது. இதனையடுத்து இன்று பி.ப. 2 மணிக்கு இரண்டு வான் கதவுகள் 6 அங்குலத் துக்கு திறந்து விடப்பட்டன. மேலும் நீர் வரத்து அதிகரித்தால் வான் கதவுகள் திறப்பு தீர்மானிக்கப்படு எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஒ,6)

# நல்லாட்சி அரசின் தெரிவுக்குழு விசாரணையில் நம்பிக்கையில்லை

*அமைச்சர் சரத் வீரசேகர*

கொழும்பு, ஜன. 6
உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு தாக்குதல்கள் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக நல் லாட்சியின் போது நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பில் தற்போதைய அரசுக்கு திருப்தி இல்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மி ரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் இன்று ஆளும் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் நலின் பெர்னாண்டோவால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். 'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எமது அரசால் பரந்துபட்ட விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆட்சியின் போது நியமிக்கப்பட்ட நாடாளு மன்றத் தெரிவுக்குழு விசாரணையின்போது வெளிவராத பல தகவல்கள், ஜனாதிபதி ஆணைக் குழு விசாரணைமூலம் வெளிவந் துள்ளன. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணை அறிக்கை குறித்து எமது அரசுக்கு திருப்தி இல்லை. ஜனாதிபதி ஆணைக்குழு வின் விசாரணைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி நிறைவடையவுள்ளன. அவ்வாறு நிறைவடைந்த பின்னர் மேலதிக தகவல்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்' என்றார் வீரசேகர. (ஒ,44)